2020

வருடாந்த அறிக்கை

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

“ஜனஜயசிட்டி” கட்டிடம், 09 ஆவது தளம், நாவல வீதி,
இராஜகிரிய

2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

01. செயல் நோக்கு

பொதுமக்களுக்கு சேவையினை வழங்குகின்ற சகல நிறுவனங்களையும் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்குவிக்கும் நிறுவனமாக விளங்குதல்.

02. செயற்பணி

அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசாரணை, கண்காணிப்பு, கல்வி மற்றும் போதனை என்பவற்றினூடாக பொதுமக்களின் இரு மொழித் தேவைகளை வழங்குதல்.

03. நோக்கங்கள்

ஆணைக்குழுவின் பொது நோக்கங்கள் பின்வருமாறு.

(அ) அரசகரும மொழிக் கொள்கையின் பயன்பாடு தொடர்பில் கொள்கை ரீதியான அடிப்படைகளைச் சிபாரிசு செய்தல் மற்றும் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுகின்றமை குறித்து விழிப்புடன் செயற்படுதல் மற்றும் கண்காணித்தல்.

(ஆ) அரசியலமைப்பின் 18 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிப் பிரயோகம் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் தாற்பரியம் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப இயங்குவதைப் பொறுப்புடன் பார்த்துக் கொள்வதற்குத் தேவையான சகல செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

(இ) அரசகரும மொழிகள் மதிப்பீடு, ஊக்குவிப்பு மற்றும் அவற்றின் அந்தஸ்து, சமத்துவம் மற்றும் பிரயோகிக்கும் உரிமையினை வரவேற்றல், நடைமுறைப்படுத்திச் செல்லல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல்.

(ஈ) தனது செயற்பாடுகள் மற்றும் கிடைக்கப்பெறும் ஏதேனும் முறைப்பாடுகளுக்குப் பதில் வழங்குதல் ஆகிய இரண்டு முறைகளிலும் விசாரணைகளை நடாத்துதல் மற்றும் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

04. பிரதான பணிகள்

மேற்குறித்த நோக்கங்களை அடைவதற்காக ஆணைக்குழு நான்கு பிரதான பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. கொள்கை ரீதியான கோட்பாடுகளை வகுத்தல் - ஆலோசனை

2. அரசகரும மொழிகளின் பிரயோகம் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் அரச பொறிமுறையினால் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் - கண்காணிப்பு

3. குறித்த மொழிகளின் அந்தஸ்து அல்லது பிரயோகம் தொடர்பில் - கல்வி

4. அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மொழி உரிமைகளை மீறல் தொடர்பான முறைப்பாடுகள் - விசாரணை

05. அமைப்பு வியூகம்

(அ) சனாதிபதி அவர்களினால் அரசகரும மொழிகள் ஆணைக்குழு நியமிக்கப்படும். ஆணைக்குழுவானது ஆறு உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது. ஓர் உறுப்பினர் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார். தலைவர் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அதிகாரியுமாவார்.

2020/01/22 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்தது.

1. சட்டத்தரணி டீ. கலன்சூரிய
2. பேராசிரியர் சந்தகோமி கோப்பரஹேவா
3. பேராசிரியர் ரதிராணி யோகேந்திரராஜா
4. பேராசிரியர் துஷ்யந்தி மெண்டிஸ்
5. கலாநிதி கவிதா ராஜரத்னம்
6. வசந்த ஏக்கநாயக்க


இக் காலப்பகுதியில் இலங்கை நிர்வாக சேவையின் (I) ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி சனோஜி ருவினிக்கா பெரேரா அதிகாரபூர்வமாக ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றினார்.

(ஆ) பணியாட்டொகுதி

2020.12.31 ஆம் திகதி போது வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவில் கடமையாற்றிய பணியாட்டொகுதியினர்.

தொடரிலக்கம்	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்களின் எண்ணிக்கை	பணியாட்களின் உண்மையான எண்ணிக்கை	குறிப்பு
01.	பணிப்பாளர்	01	-	வெற்றிடம் 01
02.	உதவிப் பணிப்பாளர்	01	01	
03.	மொழி அதிகாரி	03	01	வெற்றிடங்கள் 02
04.	நிர்வாக உத்தியோகத்தர்	01	01	
05.	நிதி அதிகாரி	01	-	வெற்றிடம் 01
05.	பிரதான எழுதுவினைஞர்	01	01	
06.	மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரி	10	04	வெற்றிடங்கள் 06
07.	அபிவிருத்தி உத்தியோகத்தர்	04	-	வெற்றிடங்கள் 04
08.	முகாமைத்துவ உதவியாளர்	10	08	வெற்றிடங்கள் 02
09.	மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்)	01	-	வெற்றிடம் 01
10.	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம)	01	-	வெற்றிடம் 01
11.	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்)	01	-	வெற்றிடம் 01
12.	சாரதி	03	02	வெற்றிடம் 01
13.	அலுவலக உதவியாளர்	04	03	வெற்றிடம் 01
	மொத்த எண்ணிக்கை	**42**	**21**	**வெற்றிடங்கள் 21**

(ஈ) 2020/12/31 ஆம் திகதியில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் அமைப்பு வியூகம்



பாகம் II

(06) மொழிக் கணிப்பாய்வு

மொழிக் கணிப்பாய்வானது ஆணைக்குழுவின் கண்காணிப்பு பணிக்குரிய ஒரு செயற்பாடாகும். இதன் போது அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆணைக்குழு நேரடி சோதனைக்குட்படுத்தி இனங்காணப்பட்ட அரசகரும மொழிக் கொள்கைக்குப் பொருந்தாத நிலைமைகள் தொடர்பில் சிபாரிசுகளை வழங்குதல் மற்றும் அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதை தொடர்ச்சியாகக் கண்காணித்தல் என்பன ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

இம் மொழிக் கணிப்பாய்வின் போது அரசகரும மொழிக் கொள்கைக்குரிய தரவுகளைத் திரட்டுவதற்காக ஆணைக்குழுவினால் வினாக்கொத்து ஒன்று பயன்படுத்தப்படுகிறது. கணிப்பாய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களுக்கு இவ் வினாக்கொத்து முதலில் சமர்ப்பிக்கப்படும். உடனடியாக வழங்க முடியாத தகவல்கள் தொடர்பில் நிறுவனத்தை முன்கூட்டியே தயார் செய்வதே இதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அவ் வினாக்கொத்துடன் கணிப்பாய்விற்கான தினமும் ஒதுக்கிக் கொள்ளப்படும்.

ஆணைக்குழுவின் மொழிக் கணிப்பாய்வுக் குழுவானது ஆறு பேரைக் கொண்டமைந்ததாகும். உதவிப் பணிப்பாளர் அல்லது மொழி அதிகாரியின் தலைமையில் மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரிகள் மூவர், முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவரும் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

நியமிக்கப்பட்ட தினங்களுக்கு அமைவாக குறித்த நிறுவனமானது இம் மொழிக் கணிப்பாய்வுக் குழுவினால் கணிப்பாய்விற்கு உட்படுத்தப்படும். இதன் போது, வினாக்கொத்தினூடாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களும் கவனத்திற் கொள்ளப்படுவதோடு, பின்வரும் அடிப்படைகளுக்கு அமைவாக கணிப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

1. நிறுவன வளாகத்தில் பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்படும் சகல பலகைகள் (பெயர்ப் பலகைகள், தகவல் பலகைகள், அறிவுறுத்தற் பலகைகள்)
2. பொதுமக்கள் சேவைக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து ஆவணங்கள்
3. அரசகரும மொழிக் கொள்கைத் தொடர்பிலான அலுவலர்களின் அறிவு
4. அலுவலர்களின் தொடர்பாடல் ஆற்றல்
5. சிங்கள / தமிழ் பயிற்சிப் பாடநெறிகள்
6. அலுவலர்களின் மொழித் தேர்ச்சி
7. இணையத்தளம்
8. மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள்
9. பிரவேச காரியாலயப் பின்னணி
10. நிறுவனத்திற்குரிய விசேட விடயங்கள் (உ-ம் :- பொலிஸ் நிலையங்கள் - முறைப்பாடுகளைப் பதிவு செய்தல்/பிறப்பு/விவாக/மரணப் பதிவாளர் - பதிவுச் சான்றிதழ்களை அரசகரும மொழிகளில் வழங்குதல்)

இந்த சோதனையின் போது அரசகரும மொழிக் கொள்கை தொடர்பில் நிலவும் அனைத்து முரண்பாடுகளும் இனங்காணப்படுவதோடு, அம் முரண்பாடுகளை சீர் செய்வதற்காக உரிய நிறுவனத்தின் தலைவருக்கு சிபாரிசுகள் வழங்கப்படும். அச் சிபாரிசுகளை 3 மாத காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தி ஆணைக்குழுவிடம் அறிக்கையிடல் வேண்டும். இவ் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மொழிக் கணிப்பாய்வுகள் அட்டவணை 1 மூலம் காட்டப்பட்டுள்ளன.

மொழிக் கணிப்பாய்வு
2020 சனவரி முதல் 2020 டிசம்பர் வரை

தொடரிலக்கம்	இடம்	திகதி
1	இலங்கை மின்சார சபை – அனுராதபுரம்	2020.03.04
2	பொலிஸ் நிலையம் – அனுராதபுரம்	2020.03.04
3	சமூக சேவைகள் திணைக்களம் – அனுராதபுரம்	2020.03.04
4	விவசாயத் திணைக்களம் – அனுராதபுரம்	2020.03.05
5	அஞ்சல் அலுவலகம் - பொரளை	2020.09.23
6	பொலிஸ் நிலையம் – ஆமர் வீதி	2020.09.23
7	பிரதேச சபை – வத்தளை	2020.09.23
8	அஞ்சல் அலுவலகம் - கொத்மலை	2020.09.29
9	பொலிஸ் நிலையம் – கொத்மலை	2020.09.29
10	பிரதேச சபை – கொத்மலை	2020.09.30
11	புகையிரத நிலையம் – கொத்மலை	2020.12.15



புகைப்படம் 1 – மொழிக் கணிப்பாய்வு கொத்மலை பொலிஸ்



புகைப்படம் 2 - மொழிக் கணிப்பாய்வு கொத்மலை பிரதேச சபை



புகைப்படம் 3 - மொழிக் கணிப்பாய்வு - கொத்மலை பிரதேச சபை

(07) மொழி மேம்பாட்டுத்தர வட்டங்கள்

பாடசாலை பிள்ளைகளுக்கு மொழிக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தலானது அரசகரும மொழிக் கொள்கையை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு முக்கியமான நீண்ட கால முதலீடாகும். எனவே, அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலைகளில் மொழி மேம்பாட்டுத்தர வட்டங்களை நிறுவுவதற்கான சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக மொழி மேம்பாட்டுத்தர வட்டங்களை நிறுவுதல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலானது அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2020 வருடாந்த செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதோடு, 07 நிகழ்ச்சித் திட்டங்கள் காலி, மாத்தளை, பதுளை, கம்பஹா, மன்னார் மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. இதன் போது, அந் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய பாடசாலைகளின் வாசிகசாலைகளுக்கு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் புத்தகத் தொகுதி ஒன்று வீதம் வழங்கப்பட்டது.

	இடம்	திகதி	பங்குபற்றிய பாடசாலைகளின் எண்ணிக்கை
1	இரத்தினபுரி மாவட்டம்	2020.02.28	53
2	அனுராதபுர மாவட்டம்	2020.03.05	38
பாடசாலைகளில் மொழி மேம்பாட்டுத்தர வட்டங்களை நிறுவுதல் தொடர்பாக தொடர்ச்சியாகக் கண்காணித்தல்			
4	தல்தூவ வித்தியாலயம் - தெஹிஓவிட்ட	2020.03.10	37
5	தெஹிஓவிட்ட வித்தியாலயம் - தெஹிஓவிட்ட	2020.09.20	50



புகைப்படம் 4 – மொழி மேம்பாட்டுத்தர வட்டம்- இரத்தினபுரி மாவட்டம்



புகைப்படம் 6 - மொழி மேம்பாட்டுத்தர வட்டம்- அனுராதபுர மாவட்டம்

(08) முறைப்பாடுகள் மீதான விசாரணை

அரசகரும மொழிக் கொள்கை மீறல் தொடர்பில் கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஆணைக்குழுச் சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு விசேட அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, அத்தகைய முறைப்பாடுகளை விசாரணை செய்வது ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். பின்வரும் முறைகளில் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.

01. கடிதங்கள் மூலம்
02. ஆணைக்குழுவிற்கு வருகை தருவதன் மூலம்
03. அச்சு ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் முறைப்பாடுகள்
04. மின்னஞ்சல்
05. தொலைபேசி அழைப்புகள்
06. அமைச்சின் 1956 அழைப்பு மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும் முறைப்பாடுகள்

மீளாய்வு ஆண்டில் 60 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளன. இம் முறைப்பாடுகளுள் 24 முறைப்பாடுகளுக்கான விசாரணை நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நிறைவு செய்யப்பட்ட சில விசேட முறைப்பாடுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 3

முறைப்பாடு	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியை கணக்கிடுவதற்காக நான் சிங்கள மொழியில் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்த போதிலும் அந்த அறிக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பது ஆங்கில மொழியிலேயே. இது அரசகரும மொழிக்கொள்கையை மீறும் எனும் ஒரு முறைப்பாடு	சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அவதானிப்புகளைக் கோரி கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. உரிய அறிக்கையை சிங்கள மொழியில் பெற்றுக் கொடுக்குமாறு பரிந்துரை வழங்கியமை.
தங்காலை நீதிமன்றத்தினால் அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான பாதையில் பொருத்தப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையில் அந்த நிறுவனத்தின் பெயர் தமிழ் மொழியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையெனும் முறைப்பாடு	தங்காலை நீதிமன்றத்தின் பதிவாளரிடமிருந்து அவதானிப்புகளைக் கோரி கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பாதையில் பொருத்தப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையை மும்மொழிகளிலும் தயாரிக்குமாறு பரிந்துரை வழங்கியமை.
இராஜகிரிய ஆயர்வேத வைத்தியசாலையில் அறுவைசிகிச்சை மற்றும் நோய்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையில் தமிழ் மொழி எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றதெனும் முறைப்பாடு	இராஜகிரிய ஆயர்வேத வைத்தியசாலையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் திருத்தி அனுப்பிவைக்கப்பட்ட மொழிபெயர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப உரிய பெயர்ப்பலகையை மும்மொழிகளிலும் தயாரிக்குமாறு பரிந்துரை வழங்கியமை.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் வெள்ளை மயில் எனும் பெயருள்ள பறவைக் குழுவிற்குரிய பெயர்ப் பலகையில் "வெள்ளை" எனக் குறிப்பிடும் போது தமிழ் மொழி எழுத்துப் பிழைகளுடன் காணப்படுகின்றதெனும் முறைப்பாடு	தெஹிவளை மிருகக்காட்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய பெயர்ப்பலகையின் தமிழ் மொழி எழுத்துப் பிழைகளை திருத்துமாறு பரிந்துரை வழங்கியமை.
இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத மத்திய நிலையத்திற்கு புதியவர்களை உள்ளீர்ப்பதற்கான பாட நெறி சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதெனும் முறைப்பாடு	புகையிரதத் திணைக்களத்தின் பொதுமுகாமையாளருக்கு, இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத மத்திய நிலையத்திற்கு புதியவர்களை உள்ளீர்ப்பதற்கான பாடநெறியை மும்மொழிகளிலும் நடாத்துமாறு பரிந்துரை வழங்கியமை.
கிரிபத்கொட மக்கள் வங்கியின் பெயர்ப்பலகையில் , இடத்தின் பெயர் குறிப்பிடப்படும் போது தமிழ் மொழி எழுத்துப் பிழைகளுடன் காணப்படுவதாகவும், தெளிவூட்டற் பலகைகள் மற்றும் தகவற் பலகைகள் அனைத்திலும் தமிழ்மொழி நிராகரிக்கப்பட்டுள்ளதெனவும் முறைப்பாடு	மக்கள் வங்கியின் பிரதான முகாமையாளருக்கு, உரிய பெயர்ப்பலகையிலுள்ள இடத்தின் பெயரிலிருக்கும் தமிழ் மொழி எழுத்துப் பிழைகளைத் திருத்துமாறும் தெளிவுடன் பலகைகள் மற்றும் தகவற் பலகைகள் அனைத்திலும் தமிழ் மொழியினை உள்ளடக்கி மும்மொழிகளிலும் தயாரிக்குமாறும் பரிந்துரை வழங்கியமை.
கடவத்தை மக்கள் வங்கியின் பெயர்ப்பலகையில் இடத்தின், பெயரைக் குறிப்பிடும்போது தமிழ் மொழி எழுத்துப் பிழைகளுடன் கானப்படுவதாகவும், தெளிவூட்டற் பலகைகள் மற்றும் தகவற் பலகைகள் அனைத்திலும் தமிழ் மொழி நிராகரிக்கப்பட்டுள்ளதெனவும் முறைப்பாடு	மக்கள் வங்கியின் பிரதான முகாமையாளருக்கு, உரிய பெயர்ப்பலகையிலுள்ள இடத்தின் பெயரிலிருக்கும் தமிழ் மொழி எழுத்துப் பிழைகளைத் திருத்துமாறும் தெளிவூட்டற் பலகைகள் மற்றும் தகவற் பலகைகளில் தமிழ் மொழியை உள்ளடக்கி மும்மொழிகளிலும் தயாரிக்குமாறும் பரிந்துரை வழங்கியமை.
நீர்கொழும்பு மாநகர சபை கட்டிடத்திற்குள் மற்றும் மாநகர சபை நியாயாதிக்க எல்லைக்குள் உள்ள வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பெயர்ப் பலகைகள் தமிழ் எழுத்துப் பிழைகளுடன் காணப்படுகின்றனவெனவும் முறைப்பாடு	நீர்கொழும்பு மாநகர சபையின் நகர ஆணையாளருக்கு , உரிய பெயர்ப்பலகையிலுள்ள தமிழ் மொழி எழுத்துப் பிழைகளைத் திருத்துமாறு பரிந்துரை வழங்கியமை.
வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பாராளுமன்றத்திற்கு முன் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலகையில் தமிழ் மொழி எழுத்துப் பிழைகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளதெனவும் முறைப்பாடு	வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவருக்கு, உரிய பெயர்ப்பலகையில் காணப்படும் தமிழ் மொழி எழுத்துப் பிழைகளைத் திருத்துமாறு பரிந்துரை வழங்கியமை.

புஸ்ஸ சிறைச்சாலைக்குச் சொந்தமான ஸ்ரீலங்கா புஸ்ஸ மறியற் கூடம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரதானப் பெயர்ப்பலகையில் "ஸ்ரீலங்கா" என்பதை தமிழ் மொழியில் குறிப்பிடும் போது " இலங்கை " என்று திருத்தப்பட வேண்டுமென முறைப்பாடு	புஸ்ஸ சிறைச்சாலையின் சிறைச்சாலை அதிகாரிக்கு, உரிய பிரதான பெயர்ப்பலகையில் தமிழ் மொழியை சரியாக உள்ளடக்கி தயாரிக்குமாறு பரிந்துரை வழங்கியமை.
இலங்கைப் பாராளுமன்றத்திற்குரிய திணைக்களத்தினுள் அமைந்திருக்கும் வாயிலுக்கு அருகிலுள்ள பெயர்ப்பலகையில் " திணைக்களம் " என்பது தமிழ் மொழி எழுத்துப் பிழைகளுடன் காணப்படுகின்றதென முறைப்பாடு	இலங்கைப் பாராளுமன்றத்தின் பதிவாளருக்கு, உரிய பெயர்ப்பலகையிலுள்ள தமிழ் மொழி எழுத்துப் பிழைகளைத் திருத்துமாறு பரிந்துரை வழங்கியமை.
சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு கொவிட் 19 தொற்றுநோய் பரவல் தொடர்பில் வழங்கப்பட்டிருக்கும் நபர்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் மாதிரிப் படிவம்ஆங்கிலம் மற்றும் சீன மொழியில் மட்டும் அச்சிடப்பட்டுள்ளதென.	சுகாதார அமைச்சின் பணிப்பாளருக்கு (தனிமைப்படுத்தல்) உரிய மாதிரிப் படிவத்தை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளை உள்ளடக்கி மும்மொழிகளிலும் அச்சிடுமாறு பரிந்துரை வழங்கியமை
குண்டசாலை பிரதேச செயலாளர் தொகுதியின் 695 அம்பகோட்டே பிரிவின் கிராம சேவகர் திரு. என். விக்னேஸ்வரன் 2020.11.02 ஆம் திகதி கிராமப் பிரிவிற்குள் வாக்காளர் பெயர் அட்டவணை மறுசீரமைப்பு மாதிரிப் படிவங்களைப் பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கும் போது, மீன் வியாபாரியொருவர் அவரை நோக்கி கத்தியை விட்டெறிந்து தமது பணிக்கு இடையூறு செய்ததாகக் குறிப்பிட்டு தெல்தெனிய காவல் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டது. ஆனால் முறைப்பாடு சிங்கள மொழியில் பதிவு செய்ததன் காரணமாக சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதென.	தெல்தெனிய காவல் நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரிக்கு, உரிய முறைப்பாட்டை அவருடைய மொழியில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்தமை.



அரசகரும மொழிகள் ஆணைக்குழு

நிதி அறிக்கை

2020

“ஜனஜயசிட்டி” கட்டிடம், 09 ஆவது தளம், நாவல வீதி, இராஜகிரிய.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு
2020 டிசம்பர் 31 திகதி வரையிலான நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	**குறிப்பு**	**2020**	**2019**
நடைமுறைச் சொத்துக்கள்			
பொருட்பதிவேடுகள்	**1**	**292,900.00**	387,400.00
முற்கொடுப்பனவுகள்	**2**	-	-
ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்	**3**	3,350,470.48	3,384,576,15
பொருட் பதிவேட்டுக் பொருட்கள்		-	79,674.35
எழுது கருவிகள்(கையிருப்புகள்)		818,090.90	971,379.21
உப முற்பணம் செலுத்துதல்		193,530.75	179,030.75
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை		1,805,438.02	670,988.13
விசேட முற்பணங்கள்		2,000.00	5,200.00
பண்டிகை முற்பணங்கள்		7,400.00	17,400.00
ஏனைய சொத்துக்கள்		-	614,800.00
		6,469,830.15	6,310,448.59
நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை			
ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	4	**5,415,802.01**	**8,292,032.65**
மொத்தச் சொத்துக்கள்		**11,885,632.16**	**14,602,481.24**
பொறுப்புகள்			
நடைமுறைப் பொறுப்புகள்			
செலுத்த வேண்டியவை	5	305,561.84	1,630,988.85
கணக்காய்வுக் கட்டணம் பொருட்டான ஒதுக்கீடு		313,214.00	308,854.00
		618,775.84	**1,939,842.85**
நடமாட்டமல்லாத பொறுப்புகள்			
பணிக்கொடைகளுக்கான ஒதுக்கீடுகள்	**6**	**3,562,360.27**	**3,122,744.90**
மொத்தப் பொறுப்புகள்			
தேறிய சொத்துக்கள்		**7,704,496.05**	**9,539,893.49**
தேறிய சொத்துக்கள்/ சமபங்கு			
திரண்ட அதிகரிப்பு/வீழ்ச்சி	**7**	**7,704,496.05**	**9,539,893.49**

நிதிக் கூற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும் குறிப்பானது நிதி அறிக்கைகளின் தொடர்ச்சியான ஒரு பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலக்கங்கள் கழிவுகளைக் குறிக்கின்றன.
நிதி அறிக்கைகள் இலங்கையில் அரச கணக்குகளின் தரத்திற்கும் அரச நிதி ஒழுங்கு சுற்றறிக்கைகளுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.
பணிப்பாளர் சபையானது இந்நிதி அறிக்கை தயாரிப்புத் தொடர்பில் பொறுப்புக் கூறும். பணிப்பாளர் சபைக்காக மற்றும் அதன் பொருட்டு கையெழுத்திடப்பட்டுள்ளது.

.....	.....	.....
(தலைவர்)	**(**பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்**)**	**டீ.எம்.ஏ.என். திஸாநாயக்க**
		(கணக்காளர்-பதில்)

அரசகரும மொழிகள் ஆணைக்குழு
2020 டிசம்பர் 31 திகதி வரையிலான நிதிச் செயலாற்றுகை மீதான கூற்று

	குறிப்பு	2019	2018
வருமானங்கள்			
திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மீண்டெழும் மானியங்கள்		21,718,000.0	25,620,000.00
வருமானங்கள்		112,553.99	265,553.08
ஏனைய வருமானங்கள்	8	111,390.77	155,493.85
மொத்த வருமானங்கள்		**21,941,944.76**	**26,041,046.93**
செலவுகள்			
கூலிகள், சம்பளங்கள் மற்றும் ஊழியர்களுக்கான அனுகூலங்கள்	9	15,616,236.27	14,334,727.33
வழங்கல் மற்றும் பயன்பாட்டுக்கான பாவனைகள்	10	1,838,679.25	1,475,666.54
பெறுமானத் தேய்வு		3,002,980.64	3,034,793.38
திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்	11	566,452.47	970,935.59
பயன்பாடு மற்றும் ஏனைய சேவைகள்	12	1,159,128.69	1,317,861.38
ஏனைய செலவுகள்	13	133,800.00	3,063,677.70
அரசகரும மொழிகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள்	13	1,210,064.88	5,748,088.54
கணக்காய்வுக் கட்டணங்கள்	14	250,000.00	250,000.00
மொத்தச் செலவுகள்		**23,777,342.20**	**30,195,750.46**
காலத்திற்கான அதிகரிப்பு (வீழ்ச்சி)		**(1,835,397.44)**	**(4,154,703.53)**

இணைக்கப்பட்டிருக்கும் குறிப்பானது நிதி அறிக்கைகளின் தொடர்ச்சியான ஒரு பகுதியாகும். அடைப்புக் குறிக்குள் காணப்படும் இலக்கங்கள் கழிவுகளைக் குறிக்கின்றன.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான தேசிய சொத்துக்கள்/ உரிமை மாற்றத்தின் கூற்று

	திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியம்	திரண்ட நிதியம்	வருடத்தில் அதிகரிப்பு / வீழ்ச்சி	ஏனையவை	மொத்தம்
2019.01.01 ஆம் திகதியில் ஆரம்ப மீதி		11,590,615.69			11,590,615.69
திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியம்	1,175,000.00				1,175,000.00
2019 ஆம் ஆண்டுக்கான அதிகரிப்பு / வீழ்ச்சி			(4,154,703.53)		(4,154,703.53)
மோட்டார் வாகன மீள் மதிப்பீடு - 2019				1,000,000.00	1,000,000.00
மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வானங்களுக்கு பெறுமானத் தேய்விடல்				(166,666.67)	(166,666.67)
இடர்கடன் மீதி சீராக்கல்				95,648.00	95,648.00
2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி	**1,175,000.00**	**11,590,615.69**	**(4,154,703.53)**	**928,981.33**	**9,539,893.49**
2020 ஜனவரி 01 ஆம் திகதிக்கான மீதி		9,539,893.49			9,539,893.49
திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியம்	-				-
2020 ஆம் ஆண்டில் அதிகரிப்பு / வீழ்ச்சி			(1,835,397.44)		(1,835,397.44)
2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி	**0.00**	**9,539,893.49**	**(1,835,397.44)**	**-**	**7,704,496.44**

நிதிக் கூற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும் குறிப்பானது நிதி அறிக்கைகளின் தொடர்ச்சியான ஒரு பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் காணப்படும் இலக்கங்கள் கழிவுகளைக் குறிக்கின்றன.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான நிதிப் பாய்ச்சல் கூற்று

	2020 ரூ.	2019 ரூ.
செயற்படுத்தல் நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்		
(அதிகரிப்பு / குறைவு)	(1,835,397.44)	(4,154,703.53)
அசையாச் சொத்துக்கள்		
வாகன விற்பனையால் பெறப்பட்ட இலாபம்	-	(255,000.00)
பணிக்கொடை	439,615.37	74,476.50
பெறுமானத் தேய்வு	3,002,980.64	3,034,793.38
முன்னைய ஆண்டு சீராக்கல்		
இடர்கடன் மீதியை சீராக்கல்	-	95,648.00
அசையாச் சொத்துக்களின் பின்னரான நிதிப்பாய்ச்சல்	1,607,198.57	(1,204,785.65)
மூலதன வேலை மாற்றங்கள்		
கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	-	-
பொருட் பதிவேடுகளின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	94,500.00	181,620.00
ஊழியர்களுக்கு வழங்கும் கடன்களின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	34,105.67	(459,864.07)
பொருட் பதிவேட்டுப் பொருட்களில் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	79,674.35	-
எழுது கருவிகள் (கையிருப்புகள்) (அதிகரிப்பு / வீழ்ச்சி)	153,288.31	580,278.25
ஏனைய சொத்துக்களின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	614,800.00	(240,400.00)
உப முற்பணங்களின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	-	-
விஷேட முற்பணங்களின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	3,200.00	(4,800.00)
மீள செலுத்தப்படாத முற்பணங்கள் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	-	-
பண்டிகை முற்பணங்களின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	10,000.00	(7,500.00)
செலுத்தப்பட வேண்டியவைகளின் - (அதிகரிப்பு / வீழ்ச்சி)	(1,325,427.01))	1,423,610.80
உப முற்பணம் செலுத்தப்பட்டவைகளில் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	(14,500.00)	-
கணக்காய்வு கட்டணக் கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு / வீழ்ச்சி)	4,360.00	161,240.00
	(345,998.68)	151,148.48
செயற்படுத்தல் நடவடிக்கைகளின் தேறிய நிதிப்பாய்ச்சல்	**1,261,199.89**	**(1,053,637.17)**
முதலீட்டு நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்		
இயந்திரம் மற்றும் பொறித்தொகுதியினை கொள்வனவு செய்தல்	**(126,750.00)**	**(2,011,825.00)**
மோட்டார் வாகன விற்பனை	-	942,500.00
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல்	(126,750.00)	(1,069,325.00)
நிதிச் செயற்பாடுகளின் நிதிப்பாய்ச்சல்		
திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியங்கள்	**-**	**1,175,000.00**
நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறிய நிதிப்பாய்ச்சல்		1,175,000.00
நிதி மற்றும் இணையான ஆதனங்களின் தேறிய (அதிகரிப்பு / வீழ்ச்சி)	**1,134,449.89**	**(947,962.17)**
வருட ஆரம்பத்தில் நிதி மற்றும் இணையான ஆதனங்கள்	**670,988.13**	**1,618,950.30**
வருட இறுதியில் நிதி மற்றும் இணையான ஆதனங்கள்	**1,805,438.02**	**670,988.13**

1. அறிக்கையிடும் நிறுவனம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழு 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் சட்டமயமாக்கப்பட்ட முழுமையாக அரச உடைமையான சட்டமாக்கப்பட்ட நிறுவனமாகும். ஆணைக்குழுவானது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் இயங்குகிறது. ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இல 40, புத்தகமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளது.

.

1.1 பிரதான நடவடிக்கைகளும் நெறிப்படுத்தலின் தன்மையும்

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து கண்காணிப்பு செய்வதே அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் பிரதான நடவடிக்கையாகும்.

1.2 ஊழியர் எண்ணிக்கை

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு ஆணைக்குழுவில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 20 ஆகக் காணப்பட்டதுடன் அந்த வருடத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 42 ஆகும்.

1.3 நிதிக்கூற்று தொடர்பான பொறுப்பு

இந்த நிதிக்கூற்றைத் தயாரிக்கும் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்பினை பணிப்பாளர் சபை ஏற்கிறது.

2. நிதிக்கூற்றைத் தயாரித்தலுக்கான அடிப்படை

2.1 இணக்கம் குறித்த கூற்று

இந்த நிதிக்கூற்று நிதிச்செயலாற்றுகையானது அறிக்கை, நிதிப் பாய்ச்சல் அறிக்கை, சமபங்குகளின் (Equity) வேறுபாடுகள், நிதி அறிக்கைக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் அரச கணக்கீட்டுத் தர நியமங்களுக்கு ஏற்ப மற்றும் நிதி மற்றும் நிதித் திட்டமிடல் அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் திணைக்களம் என்பன இணைந்து நிதி ஒழுங்கு விதிகளுக்கும் உரிய அரசாங்க சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவைப்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 மதிப்பீட்டு அடிப்படை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடையை அடிப்படையாகக் கொள்ளும் ஊழியர் ஓய்வு பணிக்கொடைத் தவிர்ந்த நிதிக் கூற்றைத் தயாரித்தலானது வரலாற்று ஆகு செலவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதிக் கூற்றில் பணவீக்க சீராக்கல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை

2.3 விளக்கக்காட்சி நாணயம்

நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படுவது இலங்கை ரூபாய்களினாலாகும். மதிப்பீடுகள் கணிசமான துறைகளின் விபரங்கள் தொடர்பில் மற்றும் நிதி கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கும் கணக்குகளின் மீது அதிகமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தாக்கங்களின் நிச்சயமற்ற தன்மையாக அமைவது கீழே காணப்படும் விடயங்கள் ஆகும்

ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் (குறிப்பு - 9)

சொத்துக்கள் குறைப்பு (குறிப்பு 3.1)

2.4 பொருட்கள் மற்றும் ஒன்றுதிரட்டல்

ஒவ்வொரு வகையையும் சார்ந்த ஒரே மாதிரியான பொருட்கள் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன. சமமற்ற வகைகளுக்கு பொருட்கள் அல்லது பணிகள் முக்கியத்துவமற்ற /கவனத்தில் கொள்ள தேவையற்ற பொருட்கள் அல்லாதவையாயின் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

2.5 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்

ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள் நடைமுறை வருடத்தில் சமர்ப்பிப்பதற்கு சகல இடங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டு மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3. விஷேட கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த வருடங்களில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் நேரொத்திருப்பதுடன் நிறுவனத்தினால் பொருத்தமானவாறு ஏற்புடையதாக்கப்பட்டுள்ளது.

3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்யும் அடிப்படைகள் சொத்து, பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள்

இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்

சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்களாவன கொள்வனவு செய்வதன் மற்றும் நிர்மாணித்தலின் பெறுமதியில் அதற்குரிய அமையச் செலவுகள் மீது ஆவணப்படுத்தப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள அடிப்படையில் வழங்கப்படும் குறைந்த திரண்ட பெறுமானத் தேய்வின் செலவுகளில் காட்டப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்களின் செலவினம், சொத்துக்களைப் பெற்றுக்கொள்ள நேரடியாக அறவிடக்கூடிய செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கைப்பற்றுவதற்கு நேரடியாக உள்ளடக்கக்கூடிய செலவுகளும் உள்ளடங்கும். திறைசேரியினாலோ அல்லது வேறொரு நிறுவனத்தினாலோ மாற்றப்படும் சந்தர்ப்பத்தில் அந்நிறுவனத்தினால் அச்சொத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்டத் தொகையை மீளக் கணக்கிடும் பெறுமதியின் பெயரில் பயன்படுத்துவதாயின் அப்போது அவை சொத்துக்களின் செலவாக பதிவு செய்யப்படும்.

முழுமையாக பெறுமானத் தேய்வுக்கு உள்ளாகி மற்றும் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற சொத்துக்கள், ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தால் அவற்றின் ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்து கொள்ள முடியாமல் காணப்படுவதால் அவற்றை மீண்டும் மதிப்பீடு செய்தல் அல்லது குறைப்புச் செய்தல் மேற்கொள்ளப்படும். இருப்பினும் இவ்வாறான வகைகளைச் சார்ந்த பொருட்கள் குறித்த விபரங்கள் நிதிக் கூற்றில் குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்படும்.

3.2 மதிப்பீட்டுப் பாவனையும் தீர்மானம் எடுத்தலும்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் மதிப்பீடுகளைத் தயாரித்தல், தீர்மானம் எடுத்தல், மற்றும் எடுகோள் செய்தல் கணக்கீட்டுக் கொள்கைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளும் போது ஏற்படும் தாக்கங்கள், தற்போதுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் போன்றவை தொடர்பில் முகாமைத்துவத்தைக் கருத்திற் கொள்ளுதல் அவசியமாகும்.

சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நியாயமானது என கருதும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் ஏனைய பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டே மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை செய்தலாவன அமைகின்றன. உண்மைப் பெறுபேறுகள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து வேறுபடலாம்.

பெறுமானத் தேய்வு

முழு வருடத்தின் பெறுமானத் தேய்வு வழங்கப்படுவது அந்தப் பொருளை கொள்வனவு செய்த ஆண்டிலே ஆகும் என்பதுடன் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளுக்கு பெறுமானத் தேய்வு வழங்கப்படவில்லை. பெறுமானத் தேய்வு மதிப்பிடப்படுவது 2008 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட தினம் /பொருள் விற்பனை செய்யப்பட்ட தினத்தின் அடிப்படையிலேயே.

நடைமுறை ஆண்டினதும் ஒப்பீட்டு ஆண்டினதும் திறனான பாவனைக்காலம் பின்வருமாறு,

பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் - 05 வருடங்கள்
அலுவலக உபகரணங்கள் - 10 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள் - 04 வருடங்கள்
கணணிகள் - 04 வருடங்கள்
குளிரூட்டி இயந்திரங்கள் - 05 வருடங்கள்

3.3 பொருட் பதிவேடுகள்

பொருட் பதிவேட்டில் காட்டப்படுவது குறைந்த செலவு மற்றும் தேறிய பெறப்பட்ட தொகையாகும். தேறிய பெறப்பட்ட தொகை என்பது மதிப்பீட்டு செலவு மற்றும் விற்பனை செலவுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவிலிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலையை கழித்ததன் பின்னர் கிடைக்கப்பெறும் தொகையாகும். பொருட் பதிவேடு, ஆணைக்குழுவின் வெளியீடுகளை உள்ளடக்கியதாகும். இந்த வெளியீடுகளின் பெறப்பட்ட பெறுமதி என்பது விலை நிலையாகக் காணப்படும் போதான விற்பனை விலையாகும். இது தொடர்பில் எவ்வித விற்பனை கிரயங்களையும் ஏற்க அனுமதிக்கப்படமாட்டாது.

3.4 முன்னரான முற்கொடுப்பனவுகளும் செலுத்தப்படவேண்டியவைகளும்

முற்கொடுப்பனவுகளும் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளும் ஏற்கப்படும் உண்மையான ஆகு செலவாகவும் மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் ஏற்கப்பட வேண்டிய ஆகு செலவொன்றாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.5 ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன்கள்

ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்கள் தொடர்பிலான விபரங்கள் ஆகு செலவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருத்தமற்ற அல்லது அறவிடமுடியாத கடனுக்கு அங்கீகாரத்தை வழங்கியிராததால் அத்தகைய கடன்களுக்காக ஏற்பாடுகள் இடப்படவில்லை. பொருத்தமற்ற அல்லது மீள அறவிடமுடியாத கடன்கள் அங்கீகாரமளிக்கப்படாததால் அத்தகைய கடன்கள், வெளிப்படுத்தல்களாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.6 பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு அமைவாகவே பணிக்கொடைக்கான ஒதுக்கீடு கணக்கிடப்படுகிறது. தற்போது இருக்கும் நிரந்தர ஊழியர்களுக்கு வருடத்திற்குரிய பணிக்கொடையாக அவருக்கான இறுதி மாதத்தின் ஆரம்ப சம்பளத்தின் அரைப்பகுதியைக் கணக்கிட்டு வழங்கப்படும்.

3.7 வருமானம்

திறைசேரியினால் மீண்டெழும் செலவுகளுக்காக விடுவிக்கப்படும் கட்டு நிதியானது முற்பண வருமானமாக அடையாளப்படுத்தப்படுகிறது. மூலதனச் செலவிற்கான கட்டுநிதி முற்பணம் அல்லது மூலதனச் செலவுகளில் நேரடியாக மாற்றம் செய்தல் அல்லது மூலதனச் சொத்துக்களில் நேரடியாக மாற்றம் செய்தல் போன்றவை ஆணைக்குழுவின் திரண்ட நேரடி மூலதன மாற்றலாக அடையாளப்படுத்தப்படும்.

3.8 செலவுகள்

ஏற்க நேரிடும் செலவின் நேரடித் தொடர்பு மற்றும் வருமானத்தின் விசேடமான பொருளின் வருவாயை அடிப்படையாகக் கொண்டே நிதிச் செயலாற்றுகை கூற்றின் செலவீனம் இனங்காணப்படுகிறது. ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்காக ஏற்கப்படும் சகல செலவுகளும் அதாவது சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைக் கொண்டு நடாத்தும் போது ஏற்க நேரிடும் செலவுகள் மற்றும் அரசகருமமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்படும் செலவுகள் போன்ற சகல செலவுகளும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3.9 நிதிப்பாய்ச்சல் கூற்று

நேரடியற்ற முறையைப் பயன்படுத்தி நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு
2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை மீதான கூற்று

1. குறிப்பு
வெளியீடுகள்

வெளியீடுகளின் பெயர்	**2020**	**2019**
	ரூ.	**ரூ.**
ஆங்கில சிங்கள கலைச்சொல் அகராதிகள்	53,050.00	53,050.00
தமிழ் ஆங்கில கலைச்சொல் அகராதிகள்	24,390.00	24,390.00
தமிழ் விஷேட கலைச்சொல் அகராதிகள்	180.00	180.00
40 மணித்தியால குறுகிய பாடநெறிப் புத்தகம்	215,280.00	309,780.00
மொத்தம்	**292,900.00**	**387,400.00**

2. முன்னரான கொடுப்பனவுகள்

2020	**2019**
-	-
-	-

3. ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் மற்றும் முற்பணங்கள்

வகை	**2020.01.01 இல் மீதி**	**சேர்ப்பு**	**மூலதன அறவீடுகள்**	**2020.12.31 இல் மீதி**
பண்டிகை முற்பணங்கள்	17,400.00	-	10,000.00	7,400.00
இடர் கடன்கள்	3,384,576.15	354,864.33	388,970.00	3,350,470.48
விஷேட முற்பணங்கள்	5,200.00	36,000.00	39,200.00	2,000.00
	3,407,176.15	**390,864.33**	**438,170.00**	**3,359,870.48**

ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், செவது மற்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி

வகை	**2020.01.01 இல் மீதி**	**சேர்ப்புகள் / மீள்மதிப்பீடுகள்**	**விற்பனைகள்**	**2020.12.31 இல் மீதி**
குளிரூட்டிகள்	275,814.54	-	-	275,814.54
கணணிகள்	3,671,866.00	-	-	3,671,866.00
மோட்டார் வாகனங்கள்	6,365,000.00	-	-	6,365,000.00
பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள்	347,309.75	-	-	347,309.75
காரியாலயத் தளபாடங்கள்	7,168,632.68	-	-	7,168,632.68
காரியாலய உபகரணங்கள்	634,975.00	126,750.00	-	7,168,632.68
மொத்த செலவுகள் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி	**18,463,597.97**	**126,750.00**	**-**	**18,590,347.97**
திரண்ட பெறுமானத் தேய்வு				
கணணிகள்	1,767,698.33	699,513.09	-	2,467,211.42
மோட்டார் வாகனங்கள்	4,776,750.00	1,591,250.00	-	6,365,000.00
பொறித் தொகுதி மற்றும் இயந்திரங்கள்	347,309.75	-	-	347,309.75
குளிரூட்டிகள்	212,143.92	43,670.62	-	275,814.54
காரியாலயத் தளபாடங்கள்	3,036,844.15	603,285.68	-	3,640,129.83
காரியாலய உபகரணங்கள்	13,819.17	65,261.25	-	79,080.96
மொத்தத் திரண்ட பெறுமானத் தேய்வு	**10,171,565.32**	**3,002,980.64**	**-**	**13,174,545.96**
தேறிய புத்தகப் பெறுமதி	**8,292,032.65**			**5,415,802.01**

வெளிப்படுத்தல்கள்

1. 2016 ஆம் ஆண்டில் பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்களின் பெறுமதி முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டதுடன் அது 2020 ஆம் ஆண்டில் மீள பெறுமதியிடுதல் வேண்டும்.

2. ரூ.1,135,775.88 பெறுமதியான அலுவலக தளபாடங்களின் பெறுமதி ரூ.1,528,016.00 மற்றும் ரூ.275,814,00.54 பெறுமதியான குளிரூட்டி இயந்திரங்களின் பெறுமதி 2020 ஆம் ஆண்டிற்குள் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிருப்பதனால் அவை 2021 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

3. அரசகரும மொழிகள் ஆணைக்குழுவிடம் முறையான முறைமையொன்று இல்லாததுடன், அது முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களை இனங்காணும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் அசௌகரியங்களின் காரணமாக மீள் மதிப்பீட்டுச் செயன்முறை தாமதமாவதற்கு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், தற்போதாகும் போது சொத்துக்களை குறிப்பிட்டு செய்யும் முறைமையொன்று அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்த செயன்முறையை பூரணப்படுத்தியதன் பின்னர் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

4. **செலுத்தப்பட வேண்டியவைகள்**

	2020	2019
	ரூ.	ரூ.
2841 - **எழுது கருவிகள்**	24,160.00	18,078.62
2811 - **சம்பளங்கள்**	6,500.00	6,500.00
2883 - தொலைபேசி	34,055.40	40,629.15
2886 - சுத்திகரிப்புச் சேவைகள்	39,261.90	52,291.32
2862 - அலுவலக உபகரண பராமரிப்பு	-	20,782.11
2464 - கணனி பராமரிப்பு	10,000.00	7,457.00
2849 - ஏனையவை	22,000.00	54,143.00
2815 - மேலதிக நேரம்	64,496.54	32,311.12
செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் (2540)	3,250.00	3,250.00
2831 - பிரயாணங்கள்	2,100.00	350.00
3042 - அச்சிடல்	99,738.00	1,395,196.53
	305,561.84	**1,630,988.85**

6. பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள்

	2020	2019
	ரூ.	ரூ.
முன்கொண்டு சென்ற மீதி	3,122,744.90	3,048,268.40
ஆண்டுக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டவை	439,615.37	443,262.00
ஆண்டிற்குள்ளான பணிக்கொடைக் கொடுப்பனவுகள்	-	368,785.50
	3,562,360.27	**3,122,744.90**

7. திரண்ட நிதி

	2020	2019
	ரூ.	ரூ.
முன்னைய ஆண்டு சீராக்கல்களுக்கு முன்னர் முன்கொண்டு செல்லப்பட்ட மீதி	9,539,893.49	11,590,615.69
(+)		
மூலதனச் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதி	-	1,175,000.00
அதிகரிப்பு / (வீழ்ச்சிக்கு) முன்னரான திரண்ட நிதி	9,539,893.49	12,765,615.69
ஆண்டுக்கான அதிகரிப்பு/(வீழ்ச்சி)	(1,835,397.44)	(4,154,703.53)
முன்னைய ஆண்டு சீராக்கல்கள்	-	833,333.33
இடர்கடன் மீதி சீராக்கல்	-	95,648.00
	3,562,360.27	**3,122,744.90**

8. ஏனைய வருமானங்கள்

	2020	2019
	ரூ.	ரூ.
ஊழியர் கடன் வட்டி	111,390.77	132,173.85
நானாவித வருமானம்	-	23,320.00
	111,390.77	**155,493.85**

9. வேதனங்கள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள்

	2020	2019
	ரூ.	ரூ.
சம்ளங்களும் வேதனங்களும்	10,705,229.36	9,391,282.19
ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு	1,456,094.71	1,248,688.00
ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்பு	364,023.68	312,172.00
மேலதிக நேரம்	358,773.15	755,057.71
சம்பளக் கொடுப்பனவுகள்	2,292,500.00	2,184,265.43
பணிக்கொடை செலவுகள்	439,615.37	443,262.00
	15,616,236.27	**14,334,727.33**

10. விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப் பொருட்கள்

	2020	2019
	ரூ.	ரூ.
எழுது கருவிகள்	536,033.30	574,458.54
சீருடைகள்	20,000.00	38,240.00
செய்திப் பத்திரிகைகள் மற்றும் பருவகால இதழ்கள்	1,470.00	79,240.00
எரிபொருள் மற்றும் எண்ணெய்	296,774.60	494,840.00
வழங்கல்கள் - நுகர்வுப்பொருட்கள்	734,724.35	-
ஏனையவை - 2849	249,697.00	288,198.00
	1,838,679.25	**1,475,666.54**

11. திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புகள்

	2020	2019
	ரூ.	ரூ.
காரியாலய உபகரணப் பராமரிப்புகள்	47,607.75	177,960.00
கணனிப் பராமரிப்புகள்	108,933.50	62,926.35
மோட்டார் வாகனப் பராமரிப்புகள்	209,774.40	118,668.32
குளிரூட்டி பராமரிப்புகள்	-	31,500.00
கட்டிடப் பராமரிப்புகள்	-	365,000.00
காப்புறுதி மற்றும் உரிமம்	200,136.82	214,880.00
	566,452.47	**970,935.59**

12. பாவனைகள் மற்றும் ஏனைய சேவைகள்

	2020	2019
	ரூ.	ரூ.
தொலைபேசி மற்றும் இணையம்	426,077.38	522,399.09
சுத்திகரிப்புச் சேவைகள்	658,051.31	695,462.29
தபால் அறவீடுகள்	75,000.00	100,000.00
	1,159,128.69	**1,317,861.38**

13. ஏனைய சேவைகள்

	2020	2019
	ரூ.	ரூ.
ஆட்சேர்ப்பு மற்றும் பரீட்சை	-	1,748,684.50
நன்கொடையாக வழங்கப்பட்ட புத்தகங்களுக்கான பெறுமதி	94,500.00	181,620.00
பிரயாண செலவுகள்- உள்ளூர்	39,300.00	226,739.00
பிரயாண செலவுகள்- வெளிநாடு	-	906,634.20
	133,800.00	**3,063,677.70**

1.4 அரசகரும மொழிகள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கம்

	2020	2019
	ரூ.	ரூ.
பயிற்சிகள்	18,000.00	918,820.00
பயிற்சிப்பட்டறைகளும் கருத்தரங்குகளும்	598,090.00	2,705,572.51
பணிப்பாளர் சபைக் கூட்ட செலவுகள்	118,265.00	377,281.00
ஏனையவை - 3070	94,456.88	273,593.50
விளம்பரம்	278,515.00	77,62.00
அச்சிடல்	99,738.00	77,625.00
வெளிக்கள விஜயங்கள்	3,000.00	-
	1,210,064.88	**5,748,088.54**

நிதிக் கூற்றுக்களுக்குரிய ஏனைய ஆவணங்கள்

மூலதனச் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள்

2020.01.01 திகதிக்கான மீதி	(77,662.98)
2020 ஆம் ஆண்டில் மூலதனச் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள்	-
2018 ஆண்டில் மூலதனச் செலவுகள்	**(77,662.98)**
2020.12.31 ஆம் திகதிக்கான மீதி	126,750.00
	(204,412.98)

மீண்டெழும் செலவுகளுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள

2020.01.01 ஆம் திகதிக்கான மீதி	670,988.13
